# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018—ம் வருடம் அக்டோபர் மாதம் 31—ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரஙகள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) இந்நகராட்சி அலுவலக தகவல் தொழில் நுட்ப பிரிவில் D-line 24 port switch பொருத்தி நிறுவும் பணிக்கு M/S Computronic Engineer's Nagercoil என்ற நிறுவனத்தாரிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1, | Supply and fixing & Net Working of 24 port switch (2 Nos) with Installation. | 20296.61 |
| | CGST 9% | 1826.80 |
| | SGST 9% | 1826.70 |
| | Total | 23950.00 |

மேற்கண்ட விபரப்படி தொகை ரூ.23950./—ஐ M/S/ Computronic Engineer's Nagercoil என்ற நிறுவனத்திற்கு ழஙக மன்ற அனுமதி வழஙகலாம்.

(ந.க.எண்901/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1536,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்பட்டது.

2)இந்நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தொழில் நுட்ப உதவியாளர்—1. மின்கம்பியாளர்—1, மின் கம்பி உதவியாளர் 1 மற்றும் குழாய் திருப்புனர்—2 ஆகிய பணியாளர்களை தினந்தோறும் ஒப்படைப்பு செய்யும் பணிக்கு (மதிப்பீடு ரூ.9.25இலட்சம்) 01/10/2019 அன்று ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1, | திரு. .ச ஜெகஸ்லால் ஒப்பந்ததாரர். | 0.00 சதவீதம் குறைவு |
| 2. | திரு. வி. ஆஸ்டின்கிலாரி ஒப்பந்ததாரர் | 0.34 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட விபரப்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.00 சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதால் திரு. சி. ஜெகஸ்லால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழஙகவும், அவசர அவசியம் கருதி குறைந்த

ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சி. ஜெகஸ்லால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1277/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1537,நாள்.31.10.2019.**

அனுமதிக்கப்பட்டது.

3)இந்நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண் 491, நாள்.25.06.2019 ன் படி இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா திறந்த வெளி கலையரங்கம் வாடகைக்கு வேண்டுபவர்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 491, நாள்.25.06.2019 ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.800/- வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு நாளது தேதி வரை வசுல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி வாடகை உயர்வு செய்யப்பட்டு 10 ஆண்டு களுக்கு மேல் ஆகி விட்டதல் 1/11/2019 முதல் அண்ணா திறந்த வெளி கலையரங்கம் நாள் ஒன்றுக்கு ரூ.1500/- வாடகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் .2972/2019/அ1

**மன்றத் தீர்மானம் எண்.1538,நாள்.31.10.2019.**

அனுமதி வழங்கப்பட்டது.

4) இந்நகராட்சி அனைத்து பிரிவு கணிணி பிரிண்டர் மற்றும் XEROX PRINTER ஆகியவற்றிற்கும் TONERS வாங்கிட நகர்மன்ற தீர்மானம் எண் 1391, நாள்.19.12.2018 ன் படி 28.02.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

**APPLE COMPUTERS SALES & SERVICE , THUCKALAY.**

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1 | LIVE TECH 88 A TONER COMPATIBLE | 1 | 650/- |
| 2 | 280A TONER COMPATIBLE | 1 | 1150/- |
| 3 | 05A TONER COMPATIBLE | 1 | 1150/- |
| 4 | 55A TONER COMPATIBLE | 1 | 1100/- |
| 5 | 49A TONER COMPATIBLE | 1 | 1100/- |
| 6 | SAMSUNG ML -1670 TONER COMPATIBLE | 1 | 1300/- |
| 7 | KYOCERA TASKALFW 2201 TONER ( ORIGINAL) | 1 | 4650/- |

**S.S COMPUTERS , SWAMIYARMADAM.**

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1 | SAMSUNG ML TONER COMPATIBLE | 1 | 1550/- |
| 1 | 88 A TONER COMPATIBLE | 1 | 750/- |
| 2 | 280A TONER COMPATIBLE | 1 | 1250/- |
| 3 | 05A TONER COMPATIBLE | 1 | 1200/- |
| 4 | 55A TONER COMPATIBLE | 1 | 1250/- |
| 5 | 49A TONER COMPATIBLE | 1 | 1250/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் **APPLE COMPUTERS SALES & SERVICE , THUCKALAY**. என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது.

குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள **APPLE COMPUTERS SALES & SERVICE , THUCKALAY**. என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று 28.02.2019 ல் விநியோக உத்திரவு வழங்கியதையும் 10.10.2019 அன்று விநியோக உத்திரவு வழங்கியதையும் , மற்றும் பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1982/2018/அ1)

**மன்றத் தீர்மானம் எண்.1539,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்பட்டது.

5) இந்நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் 2019/2020 ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் விண்ணப்பங்கள் கூட்டுறவு அச்சகம் மூலம் வாங்கவும் உள்ளூர் தனியார் விநியோகஸ்தர்கள் மூலம் COMPATIBLE TONERS வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 500000/- பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி கூட்டுறவு அச்சகம் மூலம் பொருட்கள் வாங்க நடநடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1982/2018/அ1)

**மன்றத் தீர்மானம் எண்.1540,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்பட்டது.

6) இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகனம் எண்TN75B4577 க்கு வாகன விபத்துக்காப்பீடு பிரிமியம் செலுத்துவதற்கு ஆகும் செல வு தொகை ரூ. 18187/- னை காசோலையாக யுனைடெட் இந்திய இன்சுரன்ஸ் கம்பெனி லிட் , நாகர்கோவில் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தொகையினை செலுத்தியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 1410/20170 அ2)

அ.கு: பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1541,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்பட்டது.

7) இந்நகராட்சிக்குட்பட்ட அங்கன் வாடி மையங்களில் கழிவறை வசதி , சிறிய மைய பழுது மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் ( மதிப்பீடு ரூ.1.60 இலட்சம்) பணிக்கு 11.10.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்ப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்த்தார்ர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. டி. ராமசாமி | 0.09% அதிகம் |
| 2 | திரு. என் . ஜாண் ஜஸ்டஸ் | -0.06% குறைவு |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.06% சதவீதம் குறைத்துக்கொடுத்துள்ள திரு. என் . ஜாண் ஜஸ்டஸ் ஒப்பந்த்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1189/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1542,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்பட்டது.

8) இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் BOV கொட்டகை (SHED) அமைத்தல் ( மதிப்பீடு ரூ.2.00 இலட்சம்) பணிக்கு 11.10.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்ப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்த்தார்ர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு. சி.ஜெகஸ்லால் | -0.20% குறைவு |
| 2 | திரு. பி. ஆஸ்டின் கிலாரி | 2.25 % அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -0.06% சதவீதம் குறைத்துக்கொடுத்துள்ள திரு. சி.ஜெகஸ்லால் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 1387/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1543,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்பட்டது.

9)இந்நகராட்சி மருந்துக்கோட்டை உரக்கிடங்கு பகுதியில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையம் அருகில் குப்பை களை தனித்தனியாக பிரித்தெடுக்க இரும்பு , பிளாஸ்டிக், அட்டை மற்றும் டயர் போன்ற கழிவுகளை பகுதி பகுதியாக குவியல் செய்யப்பட்டு அதை மறு சுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வர RESOURCE RECOVERY CENTER அமைக்க மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்தில்மேற்கொள்ள செலவினத்தினை பொது நிதியில் செலவிடவும் பின்னர் துய்மை இந்தியா திட்ட நிதி கிடைத்தவுடன் ஈடு செய்து கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1498, நாள் 30.072019 ன் படி அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் தற்போது RESOURCE RECOVERY CENTER மையத்திற்கு இரண்டு கதவுகளும் மற்றும் பக்கவாட்டில் கிரில் வைத்து அடைக்கப்பட வேண்டியுள்ளதால் மேற்படி RESOURCE RECOVERY CENTER மையத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிலிருந்து தற்போது திருத்திய மதிப்பீடு ரூ4.60 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் குப்பை களை தனித்தனியாக பிரித்தெடுக்க வசதியாக தக்கலை பேட்டை சந்தையில் மேலும் ஒரு RESOURCE RECOVERY CENTER அமைக்க பொது சுகாதார பிவில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி இரண்டு பகுதிகளிலும் RESOURCE RECOVERY CENTER அமைக்க ரூ 9.20 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான நிதி ஆதாயம் ஏதும் இல்லாததால் துய்மை இந்தியா திட்டம் (SBM) நிதியிலிருந்து நிதி விடுவிக்க கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண். 1431/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1544,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்பட்டது.

10)பத்மனாபபுரம் நகராட்சி சேவை வரி அலுவலகத்திற்கு ரூ.6127816/- கண்காணிப்பாளர் சென்றால் எக்ஸஸ் அலுவலக கடிதம் OC.NO.191/2019 ன் படி செலுத்த வேண்டியுள்ளதாகவும் SABKA VISHWAS திட்டத்தில் சேர்ந்தால் 40% மட்டும் செலுத்தினால் போதும். மேற்படி தொகையினை ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் எனவும் இத்திட்டம் 31/12/2019 முடிவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது S.T மற்றும் S.G.S.T, C.G.S.T க்காக பிடித்தம் செய்த தொகை ரூ 10. இலட்சம் நகராட்சி ஆணையர் கணக்கில் உள்ளது. மேற்படி தொகையில் 40% சதவீதம் செலுத்தவேண்டுமென்றால் 2451126/- உள்ளது. இத்தொகையில் ரூ 608193/- ஏற்கனவே செலுத்தப்பட்டது. மீதம் ரூ 1842933/- செலுத்த வேண்டும். இருப்பு ரூ 10 இலட்சம். மீதம் 842933/- பொது நிதியில் செலவு செய்யவேண்டியுள்ளதால் மேற்படி தொகை பொதுநிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1141/2012/B1.)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1545,நாள்.31.10.2019.</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

11) இந்நகராட்சியில் 2019-2020 ஆம் ஆண்டிற்கு தெருவிளக்கு உதிரிபாகங்கள் மற்றும் மின் சாதன பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ( **மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) 22**.10.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்த்தாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S ONS Electricals Enterprizes, Trichy. | - 20.86 % குறைவு |
| 2 | M/S. RevathyTraders, Pillayarpuram, Nagercoil. | 0.14 % அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட -20.86% சதவீதம் குறைத்துக்கொடுத்துள்ள M/S ONS Electricals Enterprizes, Trichy நிறுவனதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1416/2019/இ1.)

**மன்றத் தீர்மானம் எண்.1546,நாள்.31.10.2019.**

அனுமதிக்கப்பட்டது.

12) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(MAI) அரசாணை நிலை எண் 18 நாள் 04.02.2019- ன் படி தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டிடவிதிகள் 2019- ன் படி 04.02.2019 முதல் கட்டண விகிதங்கள் மற்றும் மூன்று ஆண்டு அனுமதி காலத்தை ஐந்து ஆண்டுகளாக மாற்றி அரசாணை வெயளியிடப்பட்டுள்ளதால் 04.02.2019 முதல் கட்டண விதிகளை மாற்றம் செய்து நடைமுறைப்படுத்த மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் செலவு தொகை பக்கம் ஒன்றிற்கு ரூ. 2100/- வீதம் உத்தேசமாக 8 பக்கத்திற்கு 16800/- உரிய தலைப்பில் அரசு கருவூலத்தில் செலுத்தவும். அதற்கான செலவுத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1552/2017/இ1.)

**மன்றத் தீர்மானம் எண்.1547,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

13).இந்நகராட்சிக்ககுட்பட்ட வார்டு எண் 11 - ல் கதவு எண் 14/55B/13 - ல் உள்ள புதிய கட்டிடத்திற்கு 01.04.2018 முதல் தரைதளத்திற்கு 1036 சதுர அடி மற்றும் முதல் தளத்திற்கு 363 சதுர அடி சேர்த்து மொத்த கட்டிடத்திற்கு 1399 சதுர அடிக்கு வரி விதிப்பு செய்யப்பட்டது. திருமதி. பர்வின் சுல்தான் என்பவரது 26/03/2019 தேதிய மனுவில் தனது வீட்டிற்கு அதிகமான அளவு வரி விதிப்பு செய்யப்பட்டு உள்ளது என்றும் அதனை குறைவு செய்து வழங்குமாறு கேட்டுள்ளார்.

அன்னாரின் புகார் மனுவின் அடிப்படையில் ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வரால் மேற்படி கட்டிடத்தினை நேரடியாக சென்று அளவிடப்பட்டதில் தரைதளம் 913.32 சதுர அடி முதல் தளம் 214.71 சதுர அடியும் சேர்த்து மொத்த கட்டிடத்தின் அளவு 1128.00 சதுர அடியில் மட்டுமே உள்ளது என நகரமைப்பு ஆய்வரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே 1128 சதுர அடிக்கு மட்டும் வரி விதிப்பு செய்யும் பொருட்டு ஏற்கனவே வரி விதிப்பு செய்யப்பட்ட வரி விதிப்பு எண் 151/011/00864 அரையாண்டு வரி விதிப்பினை ரத்து செய்து 01/04/2018 முதல் சரியான சதுர அடி 1128 க்கு வரி விதிப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1375/2019/அ1.)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1548,நாள்.31.10.2019.</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

14) இந்நகராட்சியில் சொத்து வரி , குடிநீர் வரி மற்றும் இதர வரி இனங்கள் மூலம் வரி வசூல் பணிகள் காசாளர் பிரிவு முலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. மேற்படி வரி வசூல் பணிகள் மேற்கொள்ளும் சமயத்தில் ரூபாய் நோட்டுகள் அதிக அளவில் கையாளப்படுவதும் , வரி செலுத்தும் பொது மக்களிடையே மிகுந்த காலதாமத்ததை ஏற்படுத்துவதாக அமைந்து வருகிறது. மேலும் வரி செலுத்த வருவோரிடையே பெறப்படும் ரூபாய் நோட்டுகள் சரியான முறையில் உள்ளதா எனவும் கள்ள நோட்டுகளை தவிர்க்கும் பொருட்டும் ரூபாய் நோட்டுகளை சரிபார்த்து கையாள மிகுந்த காலதாமத்ததை ஏற்படுத்துகிறது.எனவே மேற்கண்ட இடையூறுகளை களைய காசாளர் பிரிவில் ரூபாய் நோட்டுகள் எண்ணும் இயந்திரம் **(MIX VALUE COUNTER MACHINE )** வாங்க உத்தேச செலவினம் ரூபாய் 25000/- ஆகும் மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெறப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1557/2019/இ1.)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1549,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்பட்டது.

15) இந்நகராட்சிக்கு சொந்தமான டவுண்ஹால் கடை எண் - 9 வாடகை தொகை செலுத்தாத காரணத்தால் 21/01/2019 அன்று கடையினை பூட்டி சீல் வைத்து நிலுவை தொகையினை வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது.
மேற்படி கடை வழங்கப்பட்ட இடம் இதர கடைகளுக்கான மின் இணைப்புகளுக்கான மீட்டர் பெட்டி பாதுகாப்பு வைக்கப்பட்டுள்ள அறை இந்த அறையானது படிக்கட்டிற்கு கீழ் உள்ளதாலும் மின் இணைப்பு பாதுகாப்பு அறை என்பதாலும் வியாபாரம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட கடையின் உரிமம் 01/04/2018 முதல் ரத்து செய்து கணினியிலிருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது
(ந.க.எண்.0544/18/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1550,நாள்.31.10.2019.</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

16) இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தை மற்றும் மருந்துக்கோட்டை உரக்கிடங்கில் குப்பைகள் அதிகமாக தேங்கி அப்பகுதியில் சுகாதார சீர்கேடு உருவாகும் நிலை உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி தேங்கி கிடக்கும் குப்பைகளை JCB இயந்திரம் முலம் ஒருமணி நேரத்திற்கு ரூ. 750/- வீதம் 9 மணி

நேரத்திற்கு ரூ. 6750/- னை இந்நகராட்சி துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. எஸ். ஜோணி அவர்களால் செலவு செய்யப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டது. எனவை மேற்படித் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி மேற்கெள்ளப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.1551,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

17) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு, பொது பிரிவு, சுகாதார பிரிவுகளுக்கு மதிப்பீடுகள் தயாரித்தல் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் பதித்தல், குடிநீர் கட்டணம் மற்றும் சொத்துவரி கட்டணம் பதித்தல் போன்ற பணிகளுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் திட்டப்பணிகள் சம்மந்தமாக தொழில்நுட்ப அனுமதி பெறும் போது மதிப்பீடுகளில் திருத்தம் செய்யும்போது மிகவும் அவசியமாக மடிக்கணினி (Laptop) அவசியமாகிறது.மேற்படி மடிக்கணிணி வாங்குவதற்கு தோராயமாக ரூ 50,000/- ஆகும். மேற்படி மடிக்கணினியினை **SJSRY(A& OE)** திட்டத்தில் வாங்குவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் .

(ந.க.எண்.1565/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1552,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

18)இந்நகராட்சி அலுவலக வருடாந்திர கணிணி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ( மதிப்பீடு ரூ.1.00 இலட்சம்) பணிக்கு 11.10.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்ப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண் | நிறுவனதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/S DATAPOINT COMPUTERS NAGERCOIL | 84565/- |
| 2 | M/S ACT AUTOMATIONS NAGER COIL | 77290/- |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S DATAPOINT COMPUTERS NAGERCOIL நிறுவனத்தாரின் விலையை விட ரூ.7275/- குறைத்துக் கொடுத்துள்ள **M/S ACT AUTOMATIONS NAGER COIL** நிறுவனதாரரின் (ரூ.77290./-) குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1389/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1553,நாள்.31.10.2019.**

அனுமதிக்கப்பட்டது.

19) இந்நகராட்சி அலுவலக கணிணி UPS (5 KVA UPS) பழுது பராமரிப்பு பணி மற்றும் UPS க்கான பேட்டரிகளை Replace செய்த புதிய பேட்டரிகளை நிறுவுதல் பணிக்கு ( மதிப்பீடு ரூ.0.80 இலட்சம்) பணிக்கு 11.10.2019 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.

| வ.எண் | நிறுவனதாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S FRONT LINE SYSTEMS & SERVIECES PVT LTD,<br><br>CHENNAI. | ரூ. 79,972/- |
| 2 | POWER Line SYSTEMS Private Limited ., CHENNAI | ரூ. 85406/- |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S FRONT LINE SYSTEMS & SERVIECES PVT LTD,CHENNAI. என்ற நிறுவனதாரரின் ஒப்பந்தப்புள்ளியில் POWER Line SYSTEMS PVT LTD,CHENNAI - விட குறைவாக அளித்துள்ளதால் மேற்கண்ட M/S FRONT LINE SYSTEMS & SERVIECES PVT LTD,CHENNAI. என்ற நிறுவனதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1135/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1554,நாள்.31.10.2019.**

அனுமதிக்கப்படுகிறது.

**20)** தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் மக்களை சென்றடையும் வகையில் இந்நகராட்சியின் கீழ் நீறை வேற்றப்பட்ட திட்டப்பணிகள் குறித்த அறிக்கையினை மாலை மலர் நாளிதழ் சார்பாக வெளியிடப்படும் சாதனை மலரில் விளம்பரம் செய்தமைக்கு மாலை மலர் , நாகர்கோவில் நிறுவனத்தாரிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| நாளிதழ் பெயர் | பட்டியல் எண் | தொகை<br><br>ரூ. |
|---|---|---|
| மாலை மலர் | NGL – D1 9080370 | **9200.00** |
| | CGST 2.5% | **230.00** |
| | SGST 2.5% | **230.00** |
| | Total | **9660.00** |

**மேற்கண்ட தொகை ரூ**.9660/- –ஐ மாலை மலர் , நாகர்கோவில் நிறுவனத்தாருக்கு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம் .

(ந.க.எண்.1034/2019/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1555,நாள்.31.10.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

21)இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண். மதி4/1732/2019 நாள் 18/10/2019 ன் படி கன்னியாகுமரி மாவட்டம் - மாவட்ட இயக்க மேலாண்மை அலகு - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் - பகுதி அளவிலான கூட்டமைப்பு (ALF) மற்றும் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) செயல்பாட்டிற்கு - பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட டவுண்ஹால் கட்டிடத்தின் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்டி மேற்கண்ட டவுண்ஹால் கட்டிடத்தின் ஒரு பகுதியை நகர்புற வாழ்வாதார இயக்கத்திற்கு ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1513/2019/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1556,நாள்.31.10.2019.</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

22)இந்நகராட்சி அலுவலக காசாளர் பிரிவில் ரூபாய் நோட்டுகள் எண்ணும் இயந்திரம் **(LOOSE NOTE COUNTING MACHINE - MIX VALUE )** வாங்க 25.10.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனத்தாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ.எண்** | **நிறுவனதார்ர் பெயர்** | **தொகை** |
|---|---|---|
| 1 | M/S ETCO DIGITAL PVT LTD,<br>TRICHY. | ரூ. 15340/- |
| **2** | **M/S INTRINSIC SYSTEMS AND PERIPHERALS,<br>MADURAI.** | **ரூ. 13500/-** |
| 3 | M/S HEERA INDUSTRIES,<br>MADURAI. | • ரூ.16000/- |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் **M/S INTRINSIC SYSTEMS AND PERIPHERALS,MADURAI..** என்ற நிறுவனதாரரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கவும் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்குவதற்கும் செலவினத்தினை பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத் தீர்மானம் எண்.1557,நாள்.31.10.2019.</u>**

அனுமதிக்கப்படுகிறது.

23) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழேத் தெரிவிக்கப்பட்ட மூன்று ஆண்டு குத்தகை இனஙகளை 2020 – 2021 முதல் 2022 – 2023 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் பொருட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு தயாரிக்கப்பட்ட கீழ் கண்ட பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு ஏல நிபந்தனைகள் வைக்கப்படுகிறது

| வ. எண் | குத்தகை உரிமை இனஙகளின் விபரம் | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை ரூ | கொடுக்கப்பட வேண்டிய வஙகி உத்திரவாத சான்று (01–10–2019) பிறகு பெறப்பட்டது ரூ | வஙகி உத்திரவாத சான்று கொடுக்க இயலாதவர் கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ | மின் இணைப்புக் கான வைப்புத் தொகை மற்றும் இதர வகைகைக ளுக்கான வைப்புத்தெ ாகை | குத்தகை உரிம காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | தக்கலை பேட்டை தினசரி சந்தையில் விற்பனைக்காக கொண்டு வரப்படும் தலை சுமை சாமான்கள் வண்டிகள் லாறிகள் முதலியவைகளுக் கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 10,00,000/– | 30,00,000 | 15,00,000 | 50,000 | 01/04/2020 முதல் 31/03/2023 முடிய மூன்றாண்டு கள். |
| 2 | தக்கலை பேட்டை சந்தை அருகில் இரசக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 10,000/– | 25,000 | 10,000 | 2000 | 01/04/2020 முதல் 31/03/2023 முடிய மூன்றாண்டு கள். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து ஒளிபரப்பும் உரிமம். | 50,000/– | 2,00,000 | 1,00,000 | 25,000 | 01/04/2020 முதல் 31/03/2023 முடிய மூன்றாண்டு கள். |
| 4 | தக்கலை காமராஜர் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டண வசூல் செய்யும் அலுவலக உரிமம். | 1,00,000/– | 1,00,000 | 50,000 | 25,000 | 01/04/2020 முதல் 31/03/2023 முடிய மூன்றாண்டு கள். |

## ***1. சிறப்பு நிபந்தனைகள்***

## ***தக்கலை பேட்டை சந்தை***

***(உரிய காலம் 01–04–2020 முதல் 31–03–2023 வரை)***

1. சந்தையின் உரிமையாணை பற்றி இப்பொழுது இருக்கும் விதிகளும் அப்போதைக்கப்போது ஆணையரால் விதிக்கப்படும் உத்தரவுகளுக்கும் இனிமேல் ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அட்டவணையில் கண்டுள்ள கட்டணங்கள் மட்டுமே வசூலிக்க வேண்டும்.

2. சந்தைக்கு வெளியிலிருக்கும் இடங்களில் விற்பனை செய்பவரிடம் உரிமையாணை பெற்றவர் எக்காரணத்தைக் கொண்டும் கட்டணம் வசூலிக்ககூடாது. சந்தைக்குள் விற்பனை செய்பவரிடம் மட்டுமே உரிமையாணைக் கட்டணம் வசூலிக்க வேண்டும்.

3. உரிமையாணை பெற்றவர் பொதுக்கட்டுப்பாடுகளில் அட்டவணையில் கண்டுள்ள இனஙகளுக்குக் கட்டண விபரம் குறிப்பிட்ட பற்றுச்சீட்டு தனித்தனியாக அச்சிட்டு நகராட்சி முத்திரை பதித்து வழஙகப்பட வேண்டும்.

4. தினசரி சந்தை காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை திறந்து வைக்கப்படும். சந்தைகளில் வைக்கப்பட்டிருக்கும் கட்டணஙகள் எழுதப்பட்ட அறிவிப்பு பலகைகளை உரிமைதாரர்கள் தஙகளது சொந்த செலவில் எழுதி பகிரஙகமான இடத்தில் தொஙகவிட்டு பாதுகாக்க வேண்டும். அதை எக்காரணத்தை முன்னிட்டு பழுதடையவிடக்கூடாது.

5. அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரி (Income Tax) சரக்கு மற்றும் சேவை வரி (GST) தொழில்வரி (Professional Tax) மற்றும் இதர வரிகள் முழுவதும் உரிமை ஆணை பெற்றவரால் செலுத்தப்பட கடமைப்பட்டவர் ஆவார்.

6. சந்தைக்குள் ஆணையர் எந்த பொருட்களை அவைகளுக்கு தனியாக ஏற்பட்ட இடஙகளிலாவது குறிப்பிட்ட இடத்திலாவது விற்க நிர்ணயித்தால் உரிமையாணை பெற்றவர் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

7. எதிர்பாராத விதமாக ஏற்படும் கலகம், தீவிபத்து, தடுக்க முடியாத தொற்று நோய் காலஙகளில் மற்றும் தவிர்க்க முடியாத காரணஙகளில் தற்காலிகமாக சந்தை மூட சொல்வதற்கு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமையாணை பெற்றவருக்கு யாதொரு இழப்பீடு கேட்க உரிமையில்லை.

8. பராமரிப்பு காரணத்திற்காக நகராட்சியில் உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படும் வசதி குறைபாடுகளுக்கு யாதொரு இழப்பீடு கேட்க உரிமையில்லை.

9. நகர்மன்றத்தின் அனுமதியின்றி சந்தைக்குள் தற்காலிகமாவோ, நிலையாகவோ எவ்வித கட்டிடஙகளும் கொட்டகைகளும் கட்டக்கூடாது. அவ்வாறு செய்தால் நகராட்சியால் காலிசெய்யப்பட்டு அதற்காக ஏற்படும் கூடுதல் செலவு வசூல் செய்யப்படும்.

10. உரிமையாணை பெற்றவர் எக்காரணத்தைக் கொண்டும் அட்டவணையில் கண்ட கட்டணத்திற்கு கூடதலாக வசூல் செய்யக்கூடாது. அவ்விதம் வசூல் செய்வதாக சந்தை வணிகர்களிடமிருந்து ஏதாவது புகார் வந்தால் உரிமையாணை பெற்றவர் பெயரில் நகராட்சி மூலமாகவும் கிரிமினல் தரப்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் உரிமையாணை ரத்து செய்து உரிமையை மறு ஏலம் போடப்படும். அதனால் ஏற்படும் கூடுதல் நஷ்டத்திற்கு உரிமையாளரே பொறுப்பாக்கப்படும்.

11. கடைகளை எந்த வாணிபத்திற்கு பயன்படுத்தப்படுகிறதோ அதைத்தவிர வேறு பயன்களுக்காகவோ குடியிருப்புக்காகவோ பயன்படுத்தக் கூடாது.

12. தொழுநோய் உள்ளவர்களையும் பிற தொற்றுநோய் உள்ளவர்களையும் சந்தைக்குள் அனுமதிக்கக் கூடாது.

13. பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு வசதியாக வீட்டு பொருட்களை ஒழுஙகாக வைத்து விற்பனை செய்ய வேண்டும். இதற்கு ஆணையரோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவரோ வழி எந்த முறையில் இருக்க வேண்டுமென்று கூறுகிறாரோ அதையே வழியாக ஏற்க வேண்டும்.

14. சந்தையில் வைத்து வியாபாரம் செய்யும் விளைபொருட்களுக்குள்ள கட்டணத்தை மார்க்கெட் கமிட்டிக்கு உரிமையாணை பெற்றவரே செலுத்த வேண்டும்.

15. சந்தையில் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் எதுவும் வைத்திருக்கக்கூடாது.

16. சந்தையை உரிமைதாரரே தனது சொந்த செலவில் பராமரிக்ப்பட வேண்டும்.தினசரி சந்தையில் சேரும் குப்பைகள் நாள்தோறும் குத்தகைதாரரே தஙகளது சொந்த செலவில் அப்புறப்படுத்த வேண்டும். அதனை சந்தைக்குள் சேர்த்து வைத்தல் கூடாது. இதற்கு நகராட்சியிலிருந்து எந்தவித தொகையும் வழஙகப்பட மாட்டாது. மேலும் துப்புரவு பணியாளரை நிரந்தரமாக பணியில் அமர்த்தி சந்தையை தினமும் சுத்தப்படுத்தி சுகாதரமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

17. சந்தைக்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணஙகளை உரிமையாணை பெற்றவர் நகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் நேரடியாக மீட்டர் கார்டில் குறிப்பிட்டத் தொகையை அந்தந்த மாதம் செலுத்த தவறினால் ஏற்படும் விளைவுகளுக்கு உரிமையாணை பெற்றவரே பொறுப்பாவார்.

18. மின்கட்டண கூடுதல் வைப்புத்தொகை சந்தை உரிமைதாரரே செலுத்தப்பட வேண்டும். நகராட்சியால் செலுத்தப்படமாட்டாது.

19. தினசரி பேட்டை சந்தைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்புக்கு உரிமைதாரர் மின் இணைப்பு பொறுப்புத் தொகை மற்றும் இதர 14கைகளக்கு ரூ. 1,00,000/– ஏலம் நடைபெறுவதற்கு முன்னால் மொத்தமாக நகராட்சிக் கருவூலத்தில் முன்பணமாக செலுத்த வேண்டும். மின் கட்டண வைப்புத் தொகை உரிம காலத்திற்கான தணிக்கை முடிவுற்ற பின்னர்தான் திரும்ப வழஙகப்படும்.

20. பொது கட்டுப்பாட்டில் தெரிவித்துள்ள அனைத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

21. பேட்டை சந்தையில் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு கடை வாடகை வசூல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை.

22. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரிய முழு தொகையும் செலுத்தப்பட வேண்டும். வைப்புத்தொகை, கூடுதல் பொறுப்புத்தொகை மூன்றாவது ஆண்டுக்கு மட்டுமே ஈடு செய்யப்படும்.

## ***பேட்டை சந்தையில் வசூல் செய்யப்பட வேண்டிய கட்டண விபரம்.***

| வ.எண் | கட்டணஙகள் வசூல் செய்யப்படும் இனஙகளின் விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | கைவண்டி பொருட்களை ஏற்றிச் செல்லுதல். | 25. |
| 2 | காலி லோடு ஆட்டோ மூன்று வீல் .(உள் வருவதற்கு) | 25. |

| | | |
|---|---|---|
| 3 | சைக்கிளில் சுமை கொண்டு வரும் பொருட்களுக்கு. | 20. |
| 4 | தலைச்சுமை, கைச்சுமை, புல்கட்டு. | 20. |
| 5 | கோழி ஒன்றிற்கு . | 10. |
| 6 | பாரம் ஏற்றிய லாறி (ஒரு முறை). | 300. |
| 7 | வெற்று லாறி (ஒரு முறை). | 150. |
| 9 | பாரம் ஏற்றிய டிம்போ. | 200. |
| 10 | காலி டிம்போ. | 100. |
| 11 | மோட்டார் சைக்கிளில் கொண்டு வரும் பொருட்களுக்கு . | 30. |
| 12 | நான்கு வீல் ஆட்டோ (லோடுடன்). Tata Ace, Pickup. | 150. |
| 13 | நான்கு வீல் காலி ஆட்டோ, உள்ளிருந்து பாரத்துடன் வெளிவரும் வண்டி. | 100. |
| 14 | மூன்று சக்கர வாகனத்தில் கொண்டு வரும் பொருட்களுக்கு (பயணிகள் ஆட்டோ). | 75. |
| 15 | மூன்று சக்கர லோடு ஆட்டோ. | 100. |
| 16 | தற்காலிகமாக உள்ள ஸ்டால்களுக்கு 25 சதுர அடிக்கு இடம் அல்லது அதன் பாகத்திற்கு நாள் ஒன்றிற்கு. | 40. |
| 17 | வெளியில் இருந்து உள்ளே செல்லும் மூன்று சக்கர பயணிகள் ஆட்டோ. | 30. |
| 18 | இதர மோட்டார் வாகனம் | 30. |

## ***2) தக்கலை பேட்டை சந்தைக்கு அருகில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.***

1. சைக்கிள் நாள் ஒன்றிற்கு ரூ. 5 வீதமும் மோட்டார் சைக்கிள் நாள் ஒன்றிற்கு ரூ. 10 வீதமும் வசூலிக்கப்பட வேண்டும். இதில் தவறு ஏற்பட்டால் ம் உரிமம் ரத்து செய்யப்படும். ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனி ரசீது நகராட்சி முத்திரை பதித்து வழஙகப்பட வேண்டும்.

2. இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கும் சைக்கிள்/ மோட்டார் சைக்கிள்களுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

3. நகராட்சியில் அனுமதி வழங்கப்பட்டுள்ள கடையில் உள்ளவர்களின் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் பேட்டை சந்தைக்குள் செல்லும்போது அவர்களின் கடைகளின் அருகாமையில் வாகனஙகளை நிறுத்தி வைப்பதற்கு கட்டணம் வசூலிக்கக்கூடாது.

4. மின்கட்டணம் உரிமதாரரால் தான் செலுத்தப்படவேண்டும். மின்கட்டண வகைக்கு முன்வைப்புத்தொகையாக ரூ. 10,000/– ம் தனித்தனியாக செலுத்தப்படவேண்டும். கூடுதல் வைப்புத்தொகை உரிமதாரரை சார்ந்ததாகும்.

5. நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டுமே இருசக்கர வாகனம் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் ஆக்கிரமிப்பு செய்து கூரைகள் போடக்கூடாது.

6. பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் மிதிவண்டிகளை நிறுத்தி வைக்க வேண்டும்.

7. மேற்படி கட்டணம் வசூல் செய்து சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை பத்திரமாய் திருப்பி கொடுப்பதற்கு ஏலதாரரே 100 சதவீதம் முழுப்பொறுப்பாவார்.

8. நகராட்சி சிப்பந்திகள் நகராட்சி வேலையாய் வரும்போது அவர்களின் மோட்டார் சைக்கிள்களுக்கு எவ்வித கட்டணமும் வசூலிக்கக்கூடாது.

## ***3) காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம்.***

1. தினசரி காலை 5.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மட்டுமே விளம்பரம் செய்ய வேண்டும்.

2. பேருந்து புறப்படும் நேரஙகளை தவறாமல் அவ்வப்போது அறிவிக் வேண்டும். அவ்வித அறிவிப்பு போக மீதியுள்ள நேரஙகளில் தான் விளம்பரம் செய்ய வேண்டும்.

3. எந்த ஒரு காட்சியும் ஆட்சேபனைக்குரியது என ஆணையர் கருதினால் அதை காண்பித்தல் கூடாது.

4. அரசு மற்றும் நகராட்சி திட்டஙகளையோ நிர்வாக திறமைகளோ குறைகூறும் வகையில் படஙகள் மற்றும் விளம்பரஙகள் அமைக்ககூடாது.

5. எக்காரணத்தைக் கொண்டும் ஆபாச பாடல்களை காண்பிக்க கூடாது மற்றும் விளம்பரஙகள் ஆபாசமாக இருத்தல் கூடாது.

6. ஒலி, ஒளி ஆகியவற்றில் அளவு கட்டுப்பாடு உடையதாக இருக்க வேண்டும். இதனால் பொது மக்களுக்கும் பயணிகளுக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் இருக்க வேண்டும்.

7. ஆணை விதிகளின்படி காவல்துறை மற்றும் அரசு நிறுவனஙகளிலிருந்து உரிமஙகள் பெற வேண்டியிருப்பின் அவைகளை உரிமைதாரர்கள் பொறுப்பில் பெற்றுக்கொள்ள வேண்டும். இவற்றிற்கு ஆகும் கட்டணம் மற்றும் இதர விவரஙகளை உரிமைதாரர்கள் சொந்த செலவில் செலுத்திக்கொள்ள வேண்டும்.

8. மின்சாரம் தடை ஏற்படும் நாட்களிலும் எதிர்பாராத காரணஙகளினால் பேருந்து நிலையம் செயல்பட முடியாத நாட்களிலும் உரிமைதாரருக்கு ஏற்படக்கூடிய இழப்பிற்கு நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

**9.** ஒவ்வொரு பிளாட்பாரத்திற்கும் நிர்வாகம் ஏற்கும் விதத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் தங்கள் சொந்த செலவில் அமைக்கப்பட வேண்டும்.

**10.** நகராட்சி விளம்பரங்களையும் நகராட்சி திட்டங்கள், அரசு திட்டங்கள் பற்றிய தொலைக்காட்சி படங்களை ஆணையர் ஆணையிட்டால் இலவசமாக தயக்கமின்றி காண்பிக்க வேண்டும். அரசினால் தடை செய்யப்பட்ட படங்களையும் ஆபாசமான படங்களையும் திரையிடக்கூடாது.

**11.** தன் சொந்த செலவில் துணை மீட்டர் அமைக்க இதற்கான மின்கட்டணங்கள் கூடுதல் வைப்புத்தொகை மற்றும் இதர கட்டணங்கள் உரிமைதாரரே தன் சொந்த செலவில் செலுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதற்கென வைப்புத்தொகையாக ரூ. **50000/–** ம் செலுத்தப்பட வேண்டும்.

**12.** மேலும் மேற்படி பேருந்து நிலையங்களில் டி.வி. வைத்து விளம்பரம் செய்ய ஒதுக்கீடு செய்யப்படும் ஆப்ரேட்டர் அறையினை வேறு உபயோகத்திற்கு (வியாபார நோக்கில் கடைகளாகவோ அல்லது குடியிருப்பாகவோ) பயன்படுத்தக்கூடாது.

## ***4) கழிவறை மற்றும் குளியலறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்***

***உரிமம் காலம் 01–04–2020 முதல் 31–03–2023 வரை***

**1.** உரிமையாணை பெற்றவர் கீழ்கண்ட கட்டணமே வசூலிக்க வேண்டும். நகராட்சி முத்திரையுள்ள ரசீது வழங்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. சிறுநீர் மட்டும் | – | **2.00** ரூபாய். |
| **2.** கழிப்பறை | – | **5.00** ரூபாய். |
| **3.** குளியல் | – | **10.00** ரூபாய். |

**2.** கழிவறை மற்றும் குளியலறையினை பேருந்து நிலையம் மற்றும் சந்தை செயல்படும் நேரத்தில் திறந்து வைக்க வேண்டும். காலை **6.00** மணி முதல் இரவு **10.00** மணி வரை திறந்திருக்க வேண்டும்.

**3.** மின்கட்டணங்களை உரிமையாணை பெற்றவர் நகராட்சி ஆணையர் அவர்களின் பெயரில் மின்கட்டண கார்டில் குறிப்பிட்டவாறு அந்தந்த மாதங்களில் மின் வாரியத்தில் செலுத்த வேண்டும். மேலும் மின் இணைப்பு தொடர்பான கூடுதல் வைப்புத்தொகை மற்றும் இதர தொகைகள் எதுவாயினும் உரிமதாரரே மின் வாரியத்தில் செலுத்தவேண்டும். மின்வாரிய நிபந்தனைகளின்படி மேற்படி கட்டணங்கள் செலுத்த தவறினால் ஏற்படும் விளைவுகளுக்கு உரிமையாணை பெற்றவரே பொறுப்பாவார்.

**4.** கழிவறை மற்றும் குளியலறை கட்டிடங்களுக்கு அமைக்கப்பட்ட மின் பொருட்கள், தண்ணீர் குழாய்கள் உட்பட எந்தெவாரு பொருள் பழுது ஏற்பட்டாலும் உரிமைதாரர் சொந்தச்செலவில் பராமரிக்கவேண்டும்.

**5.** கழிவறை மற்றும் குளியலறை உரிமைதாரர் தம் சொந்தச் செலவில் எப்போதும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்து பராமரிக்க வேண்டும்.

**6.** ஆணையர் அவர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்களை கழிவறை மற்றும் குளியலறையினை எந்த நேரத்திலும் முன்னறிவிப்பின்றி பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

**7.** உரிமையாணை பெற்றவர் 2018–2019– ம் ஆண்டு பொது நிபந்தனைகளின் படி பற்றுச்சீட்டு கொடுக்காமல் வசூல் செய்யக்கூடாது.

**8.** ஒப்படைக்கப்படும் கட்டண கழிவறை மற்றும் குளியலறையினை யாதொரு சேதமும் இல்லாமல் உரிமகாலம் முடிவடையும்போது திருப்பி ஒப்படைக்க வேண்டும். ஏதைனும் பழுதுகள் இருப்பது தெரிய வந்தால் இழப்பீடுகளை உரிமதாரரிடம் வசூல் செய்ய நடடிக்கை எடுக்கப்படும்.

**9.** கழிவறை மற்றும் குளியலறையில் சோப்பு, எண்ணெய், சீப்பு போன்ற பொருட்கள் எதுவும் வைத்து விற்பனை செய்யக்கூடாது.

**10.** எதிர்பாராத விதத்தில் மின்சாரமோ, தண்ணீரோ நின்றுவிட்டால் யாதொரு இழப்பீடும் நகராட்சியால் கொடுக்கப்படமாட்டாது.

**11.** பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறையில் அரசு பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கு இலவசமாக பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

**12.** மின் கட்டண வைப்புத்தொகையாக ரூ. 1000/– செலுத்திட வேண்டும்.

## ***<u>அனைத்து இனஙகளுக்கும் பொது நிபந்தனைகள்</u>***

**1.** ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்ட பொது நிபந்தனைகளுக்கும் 1920 வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகள், உபவிதிகள், கணக்கு விதிகள், அரசாணைகள் மற்றும் நகர்மன்றம் விதித்துள்ள அல்லது இனி விதிக்கும் பொதுக்கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள் யாவற்றுக்கும் உட்பட்டவையாகும்.

**2.** பட்டியலில் கண்டுள்ள குத்தகை உரிம இனஙகளுக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை (ந.நி.4) அரசாணை (நிலை) எண். 181 நாள் 19.09.2008 – ன் படி உரிமம் வழஙகப்படும்.

**3.** ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் நேரில் வந்து ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும். முகவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

**4.** ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர் ஏலம் நடக்கும் நாளுக்கு முன்தினம் மாலை 5.00 மணிக்குள் வைப்புத்தொகை, கூடுதல் பொறுப்புத்தொகை அல்லது வஙகி உத்திரவாத சான்றிதழுடன் கலந்து கொள்ளும் ஏல இன விபரஙகளை எழுத்து மூலமாக அளித்து அதற்கான அத்தாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்பவர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் ஒன்றும், ஆதார் கார்டு நகல் ஒன்றும் தொலைபேசி எண் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஏலம் எடுக்காதவரின் வைப்புத்தொகை ஏலம் முடிந்தவுடன் ஏலதாரர் ஆணையருக்கு கடிதம் எழுதிக் கொடுத்து திருப்பி பெற்றுக் கொள்ளலாம். ஆனால் உச்ச கேள்விக்கு மேல் அடுத்த கேள்வி கேட்பவருடைய வைப்புத்தொகையை ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் திரும்ப வழங்க வேண்டும்.

7. இந்நகராட்சியில் அதற்கு முன் ஏலம் எடுத்து ஒழுங்காக ஏலத்தொகையை செலுத்தாதவர்கள், நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளவர்கள், கிரிமினல் கோர்ட்டில் தண்டனை அடைந்தவர் என்ற காரணத்திலாவது அல்லது முந்தைய ஒப்பந்தங்களின் நிபந்தனைப்படி நடக்காததினால் மறுபடியும் நகராட்சியில் குத்தகைக்கு கொடுப்பது ஊர்ஜிதமில்லை என்ற காரணத்தினால் எவர் ஒருவரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டர்கள். அவ்வாறு கலந்து ஏலம் எடுத்து பிற்காலத்தில் தெரிய வருமானால் அவர்கள் ஏலம் எடுத்த குத்தகையை ரத்து செய்ய ஆணையர் மற்றும் நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. அசையா சொத்துகள் இல்லாதவர் என்ற காரணத்திலாவது அல்லது ஏலம் நடந்து கொண்டிருக்கும்போது அவருடைய கேள்விகளில் சந்தேகத்திற்கு இடமிருந்தாலோ அல்லது கபடமானதும் உண்மைக்கு புறம்பானதும் என்றாவது கேள்விதாரர் போதுமான சொத்து இல்லாதவர் என்ற காரணத்திலாவது மற்றும் நகர்மன்றத்துக்கு உண்மையாகவே நஷ்டம் ஏற்படுமென்று கருதப்படக்கூடியதாக இருக்கக்கூடிய ஒருவருடைய கேள்வியை காரணம் சொல்லாமல் ஏலம் நடத்தும் அதிகாரி ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிட அதிகாரமுண்டு.

8. ஏலம் நடக்கும் காலத்திலோ அல்லது பிறகோ எந்த நிலையிலும் இந்த அறிக்கையில் கண்ட நிபந்தனைகளையும் தளர்த்தவோ, மாற்றவோ, நீக்கவோ, சேர்க்கவோ அல்லது உரிம காலத்தை குறைக்கவோ நகர்மன்றம் மற்றும் ஆணையர் ஆகியோருக்கு பூரண அதிகாரமுண்டு. இந்த ஏல அறிக்கையில் ஏலம் நடத்துவதற்காக குறிப்பிட்டுள்ள இனஙகளில் எந்த ஒரு இனத்தையும் நிர்வாக காரணஙகளை முன்னிட்டு பொது ஏலம் நடத்தாமல் இருக்க ஆணையாளர் மற்றும் நகர்மன்றத்திற்கு பூரண அதிகாரமுண்டு.

9. அறிவிக்கப்பட்ட ஏலஙகளை ஏலம் ஆரம்பிக்கும் முன்போ நடக்கும்போதோ எந்த நிலையிலும் நிறுத்தவோ ஒத்திவைக்கவோ ரத்து செய்து விடவோ ஆணையாளருக்கோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற அலுவலருக்கோ அதிகாரம் உண்டு.

10. ஏலம் நடக்கும்பொழுது ஏலம் நடத்துகிறவர் அவசியமென கருதினால் அவர் குறிப்பிடும் ஒரு தேதிக்கு ஏலத்தை எந்த நிலையிலும் தள்ளி வைக்க அதிகாரமுண்டு. அவ்விதம் செய்வதில் அன்றைய தினம் எவரொருவர் அதிக தொகைக்கு ஏலம் கேட்கிறாரோ அத்தொகையானது ஏலம் மாற்றி வைக்கப்பட்டிருக்கும் நாளில் முதல் கேள்வியாக வைத்து ஏலம் துவஙகும்.

11. ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் போது ஓர் ஆண்டிற்கான தொகை மட்டுமே குறிப்பிட்டு கேட்க வேண்டும்.

12. உரிமையாணைகள் அனைத்தும் 1920 –ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டத்திற்கும், அரசாணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றுற் குடிநீர் வழஙகுதுறை

(ந.நி.4) நாள் 19.09.2008 மற்றும் பொதுநல சட்டத்திற்கும், நகராட்சிகளின் சொத்து இடஙகள் நகராட்சி கையேடு விதிகளுக்கும் நடைமுறைகளில் உள்ளதுடன் அவ்வப்போது வெளியாகும் அரசாணைகளுக்கும் நகர்மன்றம் செய்துள்ள அல்லது இனிச் செய்யவுள்ள பொதுக்கட்டுப்பாடுகளுக்கும், சிறப்புக் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவையாகும்.

**13.** வைப்புத்தொகை மற்றும் கூடுதல் பொறுப்புத்தொகை செலுத்தாதவர்கள் எக்காரணம் கொண்டும் ஏலத்தில் பஙகெடுக்க முடியாது.

**14.** ஏலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஏலம் கோரும் தொகை அதிகமாகும் பட்சத்தில் ஏலம் நடத்தும் அதிகாரியால் நிர்ணயிக்கப்படும் கூடுதல் வைப்புத்தொகையை ஏலம் கோருபவர்கள் செலுத்த வேண்டும்.

**15.** ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்பவர்களில் எவரேனும் ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படுவதற்கு முன் உச்ச கேள்விக்கோ அல்லது உச்ச ஒப்பந்த புள்ளிக்கோ குத்தகை உரிமையாணையை எடுக்க விருப்பமுள்ளவர்கள் ஏலம் முடிந்த 24 மணி நேரத்திற்குள் உச்ச கேள்வியின் பணமாக செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். மனுவில் தான் கேட்க விரும்பும் தொகையை தெளிவாக குறிப்பிட்டு, மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டு வர மனு செய்து கொள்ளலாம். இதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய ஆணையருக்கு பூரண உரிமையுண்டு. ஏலக்கேள்வி உச்சமாக இருந்தால் ஏலத்தில் மட்டும் கலந்து கொண்டவர்கள் மட்டும் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவர மனு செய்ய தகுதி பெற்றவர்கள் மேலும், கூடுதல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு விருப்பம் தெரிவித்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரும் நிபந்தனை முதல் மற்றும் அடுத்தடுத்த அழைப்புக்கு மட்டுமே பொருந்தும் இறுதி என குறிப்பிட்ட அழைப்புக்கு இது பொருந்தாது.

**16.** ஏலக்கேள்வி ஊர்ஜிதமான உடனையே குத்தகை ஒப்பந்தம் (Concluded Contract) முழுமையாகிறது, நகர்மன்றத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அப்படி அறிவிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அல்லது அலுவலகம் நிர்ணயிக்கப்படும் கால அளவுக்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட முழுதொகையையும் செலுத்தப்பட வேண்டும். இதில் வைப்புத்தொகை, கூடுதல் பொறுப்புத்தொகை மற்றும் மின் இணைப்புக்கான தொகைகள் எதுவும் கழிக்கப்படமாட்டாது. ஏலக்கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டதற்கும் சான்றாக தம் செலவில் மன்றத்தாரால் ஏலம் ஊர்ஜிதமான 3 நாட்களுக்குள் உரிமையாணைதாரர்கள் ரூ. 20/— மதிப்புள்ள முத்திரைத்தாளில் உரிமையாணை ஒப்பந்தப்பத்திரம் எழுதி வழஙகப்படவேண்டும். அவ்வாறு செய்து தர தவறினால் உரிமையின் அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் உரிமையாணையை அவா் பொறுப்பில் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் விடப்படும். இம்மறு ஏலத்தில் நகராட்சிக்கு நஷ்டம் ஏற்பட்டால் முதலில் ஏலம் எடுத்தவரே முழு பொறுப்பாவார்.

**17.** ஏலம் எடுத்தவர்கள் ஏலப்பதிவேட்டிலும் ஏல அறிக்கையிலும், ஏலம் முடிந்தவுடனையே கையொப்பம் இட வேண்டும்.

**18.** மேற்படி ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை இதர வைப்புத்தொகைக்கு எவ்வித வட்டியும் நகராட்சியால் வழஙகப்படமாட்டாது.

**19.** ஏலம் முடிவடைந்த பிறகு ஏல விவரப்பட்டியலை 1920 —ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 68 மற்றும் 68 (எ) மற்றும் 69 பிரிவுகளின்படி நகர்மன்ற ஒப்புதலுக்கு

வைக்கப்படும். முடிவெடுக்கும் உரிமை நகர்மன்றத்திற்கு தான் உண்டு. உச்ச கேள்வியையோ, வரவிருந்த கேள்வியையோ, ஏலதாரருக்கு எந்த காரணமும் காட்டாமல் தள்ளி விடவோ அல்லது ஒப்புக்கொள்ளவோ நகர்மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

**20.** ஏலத்தொகை மன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பின் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்படும் உரிய காலக்கெடுவிற்குள் ஓராண்டு தொகையை முழுவதுமாக ஒரே தவணையில் செலுத்த வேண்டும். மேலும் சரக்கு மற்றும் சேவைவரி, வருமானவரி மற்றும் தொழில்வரியையும் குத்தகை தொகையுடன் சேர்த்து செலுத்த வேண்டும். மேலும் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சியில் இருந்து நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை தொகையுடன் அனைத்து வரிகளையும் சேர்த்து ஜனவரி மாதத்திற்குள் செலுத்தி குத்தகையை உரிமம் புதுப்பிக்க வேண்டும்.

**21.** எவைகளுக்கு நில வாடகை அல்லது சர்க்காருக்கு செலுத்த வேண்டுமோ அவைகளுக்கு உரிமதாரரால் செலுத்த வேண்டிய தொகையை ஆணையாளர் உத்தரவிடப்பட்டவுடன் உரிமதாரர் நகராட்சி அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

**22.** உரிமம் அல்லது உரிமையை வழங்குவது குறித்து மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட பின்பு வேறு யாராவது கூடுதல் தொகைக்கு கேட்டால் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

**23.** நகர்மன்ற தீர்மானத்தின்படி உரிமத்திற்கு விடப்பட்ட சொத்துக்கள் நகராட்சிக்கு தேவையென்று கருதி முன் அறிவிப்பு கொடுத்து உரிமை காலத்தின் இடையில் எந்த நிலையிலும் உரிமத்தை நிறுத்தி விட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. அப்படி நிறுத்துவதற்காக உரிமம் பெற்றவருக்கு நகராட்சி மன்ற முடிவின்படி தொகை தள்ளுபடி செய்து கொடுக்கப்படும். ஆனால் உரிமதாரருக்கு வேறு யாதொரு ஈடும் கேட்க உரிமையில்லை.

**24.** ஒவ்வொரு உரிமம் பொதுவாக உயர்ந்த தொகை கோரியவர்களுக்கே விடப்படும். ஆனால் எவ்வித காரணமும் தெரிவிக்காமல் எந்தவொரு ஏலத்தையும் ஒப்பு கொள்ளவாவது அல்லது உயர்ந்த கேள்வியை தவிர்த்து மற்றும் எந்தவொரு கேள்வியை ஏற்கவாவது அல்லது ஏலத்தை மறுத்து விடவாவது நகர்மன்றத்திற்கோ அல்லது நகர்மன்றத்தின் அதிகாரம் பெற்ற ஆணையாளருக்கோ அதிகாரம் உண்டு. காரணம் தெரிவிக்காமலே எந்த ஏலத்தையும் ஒத்திப்போடவோஅல்லது மறுமுறை ஏலத்தில் விடவோ நகர்மன்றத்திற்கோ, அல்லது ஆணையாளருக்கோ அதிகாரம் உண்டு.

**25.** ஏலம் எடுத்தவர்கள் நகர்மன்றத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக எக்காரணத்தைக் கொண்டும் உரிமத்திலுருந்து விலக்கிக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். அப்படி ஏலத்திலிருந்து விலக்கிக்கொள்ளும் பட்சத்தில் அவர்கள் கட்டிய ஏல வைப்புத்தொகையை இழப்பதுடன் மறு ஏலம் விடுவதினால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் பொறுப்பாவார்.

**26.** இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணைகளிலும், சிறப்பு நிபந்தனைகளிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டணங்களுக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் அதிகம் வசூலிக்கக்கூடாது. உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் வசூலிக்கும் எல்லாத்தொகைக்கும் ஆணையர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட முறையில் அச்சு ரசீது கொடுக்க வேண்டும். மேற்படி அச்சு ரசீது கட்டுகளை பயன்படுத்துவதற்கு முன் அலுவலகத்திற்கு கொண்டு வந்து அலுலவக முத்திரையை போட்டுக்கொள்ள வேண்டும். அலுலவக முத்திரை போடாத ரசீதுகள் செல்லுபடி ஆகாததுடன் அவ்வாறு செய்தமைக்கும்

உரிமதாரருக்கு அபராதமும் விதிக்கப்படும். அந்த ரசீது சீட்டுகளில் புத்தக எண், தொடர் எண் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிமதாரரால் கொடுக்கப்படும் எந்த ரசீது சீட்டையும், ஆணையரும் அவரது அதிகாரம் பெற்றவர்களும் தணிக்கை செய்ய முழு உரிமையுண்டு. உரிமதாரர்களால் கட்டணம் வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் பணியாளர்களின் பெயர்களை புகைப்படத்துடன் அவ்வப்போது நகராட்சி அலுவலகத்திற்கு வழஙகப்பட வேண்டும்.

27. எந்த உரிமதாரரும் உரிமகாலத்திற்கு இடையில் ஒழுஙகாக உரிமத்தொகையை செலுத்த தவறினால் அவருடைய உரிமம் முன்னறிவிப்புமின்றி ரத்து செய்ய நகர்மன்றத்திற்கு முழு அதிகாரமுண்டு. அப்படி ரத்து செய்வதால் நகராட்சிக்கு ஏற்படக்கூடிய சகல நஷ்டஙகளுக்கும் மறு ஏலம் விடப்படுவதால் ஏற்படும் இழப்பிற்கும் மேற்படி உரிமதாரரே முழு பொறுப்பாவதுடன் மேற்படி நஷ்டத்தொகையை தமிழ்நாடு நகராட்சிகள் 1920 –ம் ஆண்டு சட்டத்தின் உரிய பிரிவின் படி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது மூலமாகவும் நகராட்சிக்கு ஈடு செய்ய உடன்பட்டவராவர்.

28. கடைகளுக்கான மாத வாடகையை ஒவ்வொரு ஆஙகில மாதம் 5 –ம் தேதி அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். 5 –ம் தேதி அலுவலகம் விடுமுறையாக இருந்தால் அடுத்த வேலை நாளில் செலுத்தப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்த தவறினால் அவர்கள் கடைக்கு கொடுக்கப்பட்டுள்ள மின் இணைப்பு, தண்ணீர் குழாய் இணைப்பு முதலியவற்றை எவ்வித முன்னறிவிப்புமின்றி துண்டிக்கப்படும்.

29. எந்த காரணத்தைக் கொண்டும் உரிமம் அல்லது உரிமையாணை தொகையில் எந்த பாகத்தையும் தள்ளுபடி செய்யும்படி கேட்கவும் இந்த அறிக்கையில் சிறப்பு நிபந்தனைகளில் வரையறுத்திருக்கும் கட்டணத்திற்கு கூடுதலாக வசூலித்துக் கொள்ள உரிமையளிக்கும்படி கேட்கவும் உரிமதாரருக்கு உரிமையில்லை. மேலும் உரிமதாரருக்கு ஒப்படைக்கப்பட்ட கட்டிடஙகளை இலாகா மூலம் பராமரிப்பு செய்வதினாலாவது அல்லது அவைகளை சரி செய்து அபிவிருத்தி செய்வதினாலாவது ஏதாவது தற்காலிக இடைஞ்சல்கள் ஏற்பட்டால் அதற்காக நஷ்டஈடு கேட்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

30. உரிமையாணை கீழ் ஒப்புவிக்கப்பட்ட சொத்து முழுவதையுமாவது அல்லது அதன் ஒரு பாகத்தையாவது ஒப்பந்த காலம் முடிவடையும் முன் எந்த சமயத்திலாவது நகர்மன்ற அல்லது பொதுக்காரியஙகளுக்கு வேண்டி நகர்மன்றம் கோரி அவைகளை நகராட்சி வசம் திருப்பிக் கொடுத்தால் அவ்விதம் உரிமம் அனுபவிக்க முடியாமல் போகும் காலத்திற்கு நகர்மன்றத்தால் நிர்ணயிக்கும் கால விகிதாசாரப்படி தள்ளுபடி அல்லது நஷ்டஈடு பெற்றுக்கொள்ள உரிமதாரர் கடமைப்பட்டவராவார். இது விஷயத்தில் அதற்காக எந்தவித நஷ்டயீடும் கோர உரிமையாணைதாரருக்கு உரிமையில்லை. மேலும் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது தவறினால் எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்து செய்யப்படும்.

31. உரிமத்திற்கு விடப்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சந்தை மற்றும் இதர இடஙகளில் இந்நகராட்சி ஆணையர் அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எவ்வித பொருளும் வைக்கக்கூடாது என்றும் அல்லது எவ்வித குறிப்பிட்ட பொருளும் விற்கக்கூடாது என்றும் அந்த இடம் காலியாக வைக்கப்பட வேண்டும் என்று தெரியப்படுத்தினால் மேற்படி இடத்தில் எந்த பொருளும் வைக்காமல் அல்லது விற்பனை செய்யாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். இது விஷயத்தில் ஆணையரின் முடிவே இறுதியானது.

உரிமையாணைதாரரையும் கடைக்காரர்களையும் விற்பனைக்கு கொண்டு வருபவர்களையும் கட்டுப்படுத்துவதாகும்.

**32.** உரிமதாரர் இறந்து போனாலும் அல்லது கடன்காரராக போனாலும் அவருடைய வாரிசுகள் எக்ஸ்கியூட்டர்கள் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் அல்லது அவருடைய அசைனிகள் மன்றத்தில் தீர்ப்பிட்டு மேற்படி உரிம ஒப்பந்த நிபந்தனைப்படி நடக்க கட்டுப்பட்டவராவார்கள். ஆனால் மன்றம் உரிமத்தை ரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானித்தால் மேற்படியாளர்கள் உரிமத்தை மேற்கொண்டு நடத்த முடியாது.

**33.** உரிமையாணை பெற்றவர் இதில் குறிப்பிட்ட எந்தவொரு நிபந்தனைப்படியும் நடக்க தவறினாலும் உரிமையாணைதாரருக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் சம்மந்தப்பட்ட கட்டிடத்தில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பை துண்டித்து மின் சப்பைளயை நிறுத்தவோ உரிமையாணைதாரரையும் அவர் பொருட்களையும் உரிமையாணை ஸ்தலத்தில் இருந்து அப்புறப்படுத்தி இடத்தை பூட்டி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதனால் உரிமையாணைதாரர் தொழில் செய்வதில் ஏற்படும் இடையூறுகளுக்கும், நஷ்டஙகளுக்கும் மன்றம் பொறுப்பல்ல.

**34.** உரிமதாரர் பட்டியலில் கண்டுள்ள இடஙகளில் மின் இணைப்பு தேவையானவற்றிற்கு மின்வாரியத்திடம் தன் சொந்த பொறுப்பில் ஆணையர் பத்மனாபபுரம் நகராட்சி பெயரில் தனி மின் இணைப்பு பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் மின் இணைப்பு கூடுதல் வைப்புத்தொகை மீட்டர் பழுது கட்டணம் உரிமம் / குத்தகைதாரரைச் சார்ந்தது.

**35.** இத்தொகைகளை சரிவர கட்ட தவறினாலும் அல்லது வேறேதேனும் தவறுகள் செய்வதாலும் மின்சார சட்ட திட்டஙகளின் பேரில் உரிமையாணைதாரர் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேற்படி இடத்தில் உள்ள மின் இணைப்பு கண்டிப்பாக உரிமையாணைதாரரின் பெயருக்கு தரப்படமாட்டாது.

**36.** மின் மீட்டர் பழுதுபட்டாலோ அல்லது மின்சார விதிகளுக்கு புறம்பாக குறைபாடுகள் ஏதாவது மின்சார துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் நஷ்டஙகளுக்கு உரிமதாரரே முழு பொறுப்பாவார். மேலும் மின் இலாகாவால் விதிக்கப்படும் தண்டத் தீர்வுக்கு உரிமதாரர் முழு பொறுப்பாவார். நகராட்சியானது எவ்வித பொறுப்பாகாது.

**37.** நகராட்சி உரிமையான இடஙகளில் கூடுதலாககேவா அல்லது ஒரு பகுதிக்கு மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில் அந்தந்த உரிமையாணைதாரர் அவருடைய சொந்த பொறுப்பிலும் செலவிலும் மின் வாரியம் மூலம் அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பெறப்படும் மின் இணைணப்பு ஆணையர் பத்மனாபபுரம் நகராட்சி பெயரில் கொடுக்கப்படும். அவ்வாறு பெறப்படும் மின் இணைணப்பிற்கு ரூ. **5000/–** வைப்புத்தொகையாக நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும். மேற்படி மின் இணைப்பு கொடுப்பது ஆணையர் முடிவுப்படி நடக்க உரிமையாணைதாரர் கடமைப்பட்டவராவார்.

**38.** உரிமத்திற்கு விடப்பட்ட இடத்தில் நகராட்சியில் பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகள் இதர விளக்குகள் இதர தளவாட மற்றும் எல்லா சாமான்களின் பாதுகாப்பிற்கு உரிமதாரரே பொறுப்பாவார். இதில் ஏதேனும் குறைபாடுகள் தெரியவந்தால் அதை உடனடியாக திருப்பித்தர வேண்டியது உரிமதாரரின் பொறுப்பாகும். தவறும் பட்சத்தில் மேற்படி பொருளின் கிரையத்தை

நகராட்சி அலுவலகத்தில் செலுத்த உரிமதாரர் கட்டுப்பட்டவராவார். அப்படியும் கட்டத் தவறினால் அவர் கட்டிய வைப்புத் தொகையில் இருந்து மேற்படி தொகை பிடித்தம் செய்யப்படும்.

**39.** நகராட்சியின் முத்திரையை போட்டுக் கொள்ளாமல் ரசீதுகள் வழங்கும் உரிமதாரர்கள் பேரில் கடும் நடவடிக்கை எடுத்து விளக்கம் பெறாமலேயே அம்மாதிரி கட்டுப்பாட்டிற்கு மீறி அவர்கள் செய்யும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூ. 1000/– க்கு குறைவுபடாமல் அபராதம் விதிக்கப்படும். ஒவ்வொரு நாளும் வசூல் செய்யும் கட்டணத்திற்கு கணக்கு விபரம் சரியாக எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். அக்கணக்குகளை பரிசீலனை செய்ய அனுமதிக்க உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

**40.** உரிமையாணை காலத்தில் உரிமையாணை பெற்றவர் பிறர் பெயரிலாவது அல்லது உரிமையாணை பெற்றவர் பிறராவது தொடர்ந்தால் அவைகளுக்காக ஏற்படும் பொருட் செலவிற்கோ யாதொரு பகுதியும் நகராட்சி ஏற்றுக்கொள்ள முடியாததுடன் நகராட்சி எவ்விதத்திலும் இதற்கு பொறுப்பேற்காது.

**41.** உரிமையாணை காலத்தில் இந்த நிபந்தனைகளில் உள்ள இனஙகள் அரசு அல்லது நகராட்சியில் மாற்றப்பட்டாலும் அல்லது எஙகு இயஙகினாலும் உரிமையாணைதாரர் அஙகு இதில் கண்டுள்ள கட்டணஙகளையே எடுத்துக்கொள்ள வேண்டியது. அதற்காக நகராட்சியிலுருந்து எந்தவித நஷ்டயீடோ அல்லது உரிமையாணையை ரத்து செய்யும்படி கேட்கவோ உரிமையாணைதாரருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

**42.** உரிம காலத்தில் உரிமத்திற்கு விடப்பட்டுள்ள இடஙகளில் சட்டம், ஒழுஙகு (Law and Order) அமைதி நிலவ அவ்வப்போது உரிமம் பெற்றவர் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் அவர்கள் தவறுவார்களேயானால் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**43.** உரிமம் இடத்தில் உரிமதாரர் தன்னால் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிப்பந்திகள், ஏஜெண்டுகள் முதலானவர்கள் பெயர்களை அவ்வப்போது ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும். அவர்கள் ஒழுஙகாக நடக்க தவறிய காரணத்திற்காகிலும் வேறு எந்த காரணத்திற்காகிலும் உரிம காலத்தில் வேலை செய்ய கூடாது என ஆணையர் தெரிவித்தால் உரிமதாரர் அதற்கு கட்டுப்பட்டுஅந்த சிப்பந்திகளை வேலையில் இருந்து நீக்கிவிட வேண்டும். ஆணையாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இல்லாமல் மறுபடியும் அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள கூடாது.

**44.** உரிமதாரருக்கு கொடுக்கப்படும் அறிக்கைகள், குறிப்பாணைகள் அல்லது உத்தரவுகள் அவரின் கடை வாசஸ்தலத்திற்கு அல்லது தொழில் செய்யுமிடத்திற்கு அனுப்பப்பட்டால் அல்லது மேற்படி இடத்தில் போடப்பட்டால் அவரிடத்தில் அது சரியான முறையில் சார்பு செய்ததாகவே கருதப்படும்.

**45.** எல்லா உரிமையாணை பெற்றவர்களுக்கும் செல்லத்தக்கதாய் இருப்பதுடன் உரிமத்திற்கு இச்சரத்துகள் யாவும் பிரிக்கப்படாத நிபந்தனைகளாக கருதப்படுவதால் இவைகளில் நகல் உரிமம் ஒப்பந்த பத்திரம் அல்லது உடன்படிக்கையுடன் சேர்க்க வேண்டியது அவசியமாக மாட்டாது.

**46.** தொடர்ந்து வேண்டுமென்றே சிறப்பு பொதுக் கட்டுப்பாடுகளை உரிமதாரர் தவறுதலாக ஆணையாளருக்கு தெரிய வந்தால் மேற்படி உரிமத்தை ரத்து செய்ய மன்றத்திற்கு அனுமதி உண்டு.

**47.** உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்படும் சொத்துக்கள் முழுவதையும் உரிம காலம் முடிவு பெற்றவுடன் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். உரிமதாரரிடம் ஒப்படைக்கும் சொத்துக்கள் முழுவதையும் உரிமதாரர் கவனிக்காததினால் சொத்துகளுக்கு நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே அதற்கு பூரண பொறுப்பாளியாவார். உரிமதாரர் செய்கையினாலாவது அல்லது தப்பிதத்தினாலாவது நகராட்சி சொத்துகளுக்கு ஏற்படும் சகல மராமத்து செலவுகளையும் உரிமதாரரிடம் வசூலிக்கப்படும்.

**48.** மார்க்கெட்டுகளிலும் மற்றும் ஏலம் விடப்படும் இதர உரிமையாணை இடங்களிலும் சேரும் சாணம், குப்பை முதலியவைகளை உரிமதாரர் தனது சொந்தச் செலவில் தினமும் அகற்றிக்கொள்ள வேண்டும். அதற்காக எந்த இழப்பீடும் நகராட்சியால் வழஙகப்பட மாட்டது. தஙகளுக்குரிய குத்தகை இடத்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டியது குத்தகை தாரரின் கடமையாகும். இதற்காக ஒரு துப்புரவு பணியாளரை தஙகள் தஙகளது சொந்த செலவில் நியமனம் செய்து அப்பணியாளரின் பெயரினை இந்த நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும்.

**49.** உரிமையாணைதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இடஙகளுக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் எந்த பொருட்களையும் விற்கவோ அல்லது வைக்கவோ கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி உரிமையாணை ரத்துச் செய்யப்படும்.

**50.** உரிமையாணைதாரர் தாம் வசூலிக்க அனுமதிக்கப்பட்ட கட்டண விகிதத்தை அறிவிப்பு பலகையில் தனது சொந்தச் செலவில் எழுதி அப்பலகையை எல்லோருக்கும் தெரியும்படியான இடத்தில் அமைத்து பாதுகாத்து வர வேண்டும். அந்த விகிதப்படி கட்டணஙகளை வசூலிப்பது உரிமையாணைதாரரின் உரிமையும் பொறுப்பாகும். அதன்படி வசூலிக்க இயலாமல் போனால் உரிமையாணைதாரரே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது. அது சம்மந்தமான உரிமையாணைதாரர் மன்றத்தின் பேரில் நஷ்டயீடு கோர இயலாது.

**51.** மார்க்கெட்டுகள், ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் இதர உரிமையாணை இடஙகளின் யாதொரு விதமான விளம்பரஙகள் அலுவலக உத்தரவின்றி எழுதாமலும், ஒட்டப்படாமலும் உரிமையாணைதாரர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**52.** உரிமதாரர் இந்த ஏல அறிக்கையிலுள்ள ஏதாவதொரு நிபந்தனைப்படி நடக்க தவறினாலும் மேற்படியாரின் உரிமம் உடனே ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும். அதனால் மன்றத்திற்கு ஏற்படும் நஷ்டத்தையும் மற்ற இதர செலவுகளையும் உரிமதாரரால் கட்டப்பட்டு இருக்கும் வைப்பு தொகையிலிருந்தோ அல்லது நகராட்சி ஒப்பந்தகாரரால் கட்டப்பட்டிருக்கும் வைப்பு தொகை அல்லது எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் மன்றத்திற்கு சொந்தமாக்கிக் கொள்ளப்படும்.

**53.** இந்த பொது நிபந்தனைகளில் ஏதாவதொன்றையோ அல்லது சம்மந்தப்பட்ட இனத்தின் கீழ் உள்ள நிபந்தனைகளில் ஏதாவதொன்றை உதாசீனம் செய்தால் அப்படி செய்யப்படும்

ஒவ்வொரு தடவக்கும் ரூ. 1000/– க்கு குறைவு படாமல் உரிமையாணைதாரருக்கு அபராதம் விதிக்க ஆணையருக்கு அதிகாரம் உண்டு. இதை தவிர உரிமையாணை ரத்து செய்யவும் இலாகா மூலம் நடத்தவும் மறுபடியும் ஏலம் விடவும் உரிமை உண்டு. உரிமையாணையை அப்படி ரத்து செய்வதாலும் மறு ஏலம் விடுவதாலும் இலாகா மூலம் நடத்துவதாலும் ஏற்படும் நஷ்டஙகளுக்கு உரிமையாணைதாரரே முழு பொறுப்பாவார். ஆனால் மேலே சொன்னபடி மறு ஏலத்திலோ இலாகா மூலம் நடத்துவதினாலோ ஏற்படும் லாபத்தில் உரிமையாணைதாரர் எவ்வித உரிமையோ பஙகோ கேட்க உரிமையில்லை. டேவணியிலிருந்தோ அல்லது மற்ற எந்தவகை தொகையிலிருந்தோ ஈடு செய்து கொள்ளவும் மன்றத்திற்கு சொந்தமாக்கிக் கொள்ளவும் மேலே சொன்னபடி நிபந்தனைகளை அனுசரிக்காததிற்காக டேவணியை சொந்தமாக்கிக் கொள்ளும் விஷயத்திலோ அல்லது பணத்தை உள்வடைத்துக் கொள்வதோ மன்றத்தின் தீர்மானமே முடிவானதாகும். மேற்படி தீர்மானத்தை சிவில் கோர்ட்டில் விவாதிக்க உரிமதாரருக்கு உரிமையில்லை.

54. உரிமதாரர் கட்டப்பட்டிருக்கும் வைப்புத் தொகையிலிருந்து விதிக்கப்படும் அபராதத்திற்கு முழு பாகத்தையோ உள்வடைத்துக் கொள்ளலாம். அப்படி உள்வடைத்துக் கொள்ளப்படும் தொகையை உத்தரவு கிடைத்த ஒரு வார கெடுவிற்குள் உரிமதாரர் மறுபடியும் வைப்புத் தொகையை கட்டி விட வேண்டியது. தவறினால் மேற்படி தொகை உரிமபாக்கி வசூலிக்கப்படுவது போல் வசூலிக்கப்படும்.

55. உரிமம் சம்மந்தமாக ஏற்படும் பாக்கி தொகைகளை உரிமதாரருக்கு நகராட்சியிலிருந்து கிடைக்க வேண்டிய இதர எந்த தொகையிலிருந்து ஒப்புதல் ஏதுமின்றி எடுத்துக்கொள்ள மன்றத்திற்கு அதிகாரமுண்டு. தாஙகள் செலுத்தியுள்ள வைப்புத்தொகை மூன்றம் ஆண்டு குத்தகை தொகையில் மட்டுமே ஈடு செய்து கொள்ளப்படும்.

56. உரிமம் இடத்தில் எவ்வித பிராணிகளை கட்டவோ, வளர்க்கவோ கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது. மீறும் உரிமதாரருக்கு ஆணையாளர் அவர்களால் அபராதம் விதிக்கப்படும்.

57. எதிர்பாராத விதமாக ஏற்படும் புயல், காற்று, வெள்ளம், கலகம், தீவிபத்து, தடுக்க முடியாத தொற்று நோய் காலஙகளில் மற்றும் தவிர்க்க முடியாத காரணஙகளில் தற்காலிகமாக உரிம தலத்தை மூட சொல்வதற்கு ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அப்படிப்பட்ட காலத்திற்கு உரிமையாணை பெற்றவருக்கு ஏற்படக்கூடிய பொருள் இழப்பிற்கோ கட்டண வருவாய் குறைவிற்கோ அல்லது வேறு நஷ்டத்திற்கோ யாதொரு இழப்பீடு கேட்க உரிமையில்லை.

58. நகராட்சி உரிம இடஙகளுக்கு உரிமத்தொகை செலுத்தாமல் இருந்தாலும் உரிமதாரருக்கு அறிவிப்பு கொடுக்கப்படாமலேயே ஆணையர் அல்லது அவரது அஙகீகாரம் பெற்றவராது மேற்படி இடம் பூட்டப்பட்டிருந்தாலும், பூட்டை உடைத்து அல்லது வேறு விதத்திலாவது இடஙகளில் நுழைந்து அதனுள் உள்ள சொத்தை கைப்பற்றிக்கொண்டு நகர்மன்றத்தால் வசூல் ஏற்பாடு செய்ய அதிகாரம் உண்டு. அவ்வாறு கைப்பற்றியதால் ஏற்படும் செலவுகள் அல்லாத நஷ்டத்தை ஏல சரத்துக்களின் படி நடக்க தவறிய உரிமதாரரிடமிருந்து வசூல் செய்யப்படும்.

**59.** உரிம வழஙகப்பட்ட இடத்தில் மதுபானம் மற்றும் அரசினால் தடை செய்யப்பட்ட பொருட்கள் கண்டிப்பாக உபயோகிக்க அனுமதிக்கக்கூடாது.

**60.** உரிமம் சம்மந்தப்பட்ட இடம் அல்லது இதர சொத்துக்களை ஒப்படைப்பதில் உரிமம் தொடஙகும் தேதியில் உரிமதாரருக்கு ஒப்புவிக்க தாமதமோ தடையோ ஏற்பட்டால் அதனால் உரிமம் ரத்தாகாது. தாமதிக்கும் கால அளவிற்கு உரிம விகதிம் தொகையை மன்றம் முடிவு செய்யும் அளவிற்கு தள்ளுபடி செய்து கொடுப்பதைத்தவிர நஷ்டத்திற்கு நகர்மன்றம் பொறுப்பேற்கப்படமாட்டாது.

**61.** குத்தகை உரிமத்திற்கான விதிமுறை மற்றும் இதர காரணஙகளினால் நகராட்சி நிர்வாகம் குத்தகைதாரர்களுடைய குத்தகை தொடர அனுமதிக்க வேண்டாம் என கருதினால் இதற்காக நகர்மன்றம் ஒப்புதலுடன் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும். மேற்குறித்த காரணஙகள் ஏதாவது ஒன்றிற்கு குத்தகை உரிமம் ரத்து செய்வதற்கான உத்தரவு அளிக்கப்பட்டவுடன் மேற்படி கடையை நகராட்சி வசம் குத்தகையை ஒப்படைக்க வேண்டும். மேற்படி குத்தகை உத்தரவை குத்தகை ரத்தானவர் வாஙக மறுத்தால் மேற்படி உத்தரவு அதற்குரிய கடையில் நகராட்சி அலுவலரால் ஒட்டப்படும். அவ்வாறு நகராட்சி பணியாளர்களால் அறிவிப்பு ஒட்டப்படுவதே குத்தகைதாரரிடம் சார்பு செய்வதற்கு சமமாகும்.

**62.** குத்தகை ரத்து செய்யப்பட்டவர் மேற்படி குத்தகையை நகராட்சி வசம் ஒப்படைக்க மறுத்தால் நகராட்சியின் உரிய அதிகாரம் பெற்றவரால் மேற்படி குத்தகையை நகராட்சி தன் வசப்படுத்திக் கொள்ளும்போது தாஙகள் குத்தகை அனுபவித்துக் கொள்ளும் அளவிற்கு நகராட்சி பொறுப்பும் ஏற்காது. எந்தவித இழப்பு தொகையும் வழஙக இயலாது.

**63. 2020–2021** முதல் **2022–2023–ம்** ஆண்டுகளில் குத்தகை இனம் முழு தொகையில் வருமான வரி (Income Tax) வருமானவரித்துறையால் நிர்ணயிக்கப்படும் சதவிகிதத் தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். வருமானவரித் தொகையில் ஏதேனும் விடுதல் விடுபட்டிருந்தால் விடுதல் தொகையையும் ஏல உரிம தாரர் செலுத்த வேண்டும். அதன் பின்னர் தான் இவ்வினக் குத்தகைக்கான உரிமையாணையை ஊர்ஜிதம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**64.** முதலாம் ஆண்டு முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகை (முதலாம் ஆண்டு குத்தகை தொகையுடன் **5%** தொகை சேர்த்து) ஒரே தவணையாக (முந்தைய நிதியாண்டு) ஜனவரி மாதத்திற்குள் செலுத்தி உரிமம் புதுப்பிக்க வேண்டும். இரண்டாம் ஆண்டின் முடிவில் இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையுடன் **5%** தொகை சேர்த்து ஒரே தவணையாக செலுத்தி மூன்றாம் ஆண்டிற்கான உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**65.** உரிமை அல்லது உரிமையாணைக் காலத்தில் உரிமதாரரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் முழுமையும் அல்லது எந்த பாகமாவது நகராட்சிக்கு தேவையானால் உரிமதாரர் எவ்வகை தடையுமின்றி எந்தவித நட்ட ஈட்டுத் தொகையும் கோராமல் நகராட்சியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதில் நகர்மன்ற தீர்மானமே முடிவானதாகும். சந்தையை அல்லது சந்தையில் உள்ள கடைகளை நகராட்சி திருத்தி அமைக்கவோ, செப்பனிடவோ செய்யும் செயல்களினால் உரிமையாணை பெற்றவருக்கும் ஏற்படும் வணிகக் குறைவிற்கோ, கேட்டிற்கோ யாதொரு நஷ்டஈடும் கேட்க அவருக்கு உரிமையில்லை.

**66.** உரிமம் அல்லது உரிமையாணை பெற்ற இடத்தை எழுத்து மூலமாக உரிய ஒப்பந்தம் பெறப்பட்டிருந்தாலொழிய எவ்வகை மாறுதலாவது அல்லது புதிய கட்டிட வேலையாவது செய்யக் கூடாது. ஆனால் நகராட்சியின் மூலம் எவ்வகை மாறுதலும் செய்ய உரிமையுண்டு. அதைத் தடுக்க உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

**67.** ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக உரிமையாணை பெற்ற இடத்தை அந்தக் குறிப்பிட்ட காரியத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். நகராட்சியால் அனுமதி வழஙகப்படாத தொழில் ஏதும் செய்யக் கூடாது. மேலும் அரசால் தடை செய்யப்பட்ட தொழில்கள் ஏதும் நடத்தல் கூடாது.

**68.** உரிமையாணை பெற்றவர் தாம் உரிமையாணையையோ அல்லது உரிமத்தையோ மற்றவர்களுக்கு மாற்றவோ அல்லது விற்று விடவோ கூடாது. மேலும் அவைகளை வேறு யாருக்கும் உரிமை மாற்றிக் கொடுக்கவோ அல்லது உள் வாடகைக்கு விடவோ கூடாது. இதை மீறி செய்பவர்களை கட்டிடஙகளிலிருந்து அப்புறப்படுத்தி அவர்களுக்கு வழஙகப்பட்டுள்ள உரிமத்தை உடனடியாக ரத்து செய்யப்படும். இதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நட்டஙகளையும் அன்னாரிடமிருந்து வசூலிக்கப்படும். மேலும் அன்னார் மீது வழக்கும் தொடரப்படும். மேற்படி வகைக்கு நகராட்சியிலிருந்து எவ்வித நட்ட ஈடும் கேட்க உரிமதாரருக்கு உரிமை கிடையாது.

**69.** எல்லா உரிமதாரர்களும் வியாபாரம் சம்மந்தமான கணக்குகளை அவரவர்களின் பெயரில் தான் வைக்க வேண்டும். வியாபாரம் சம்மந்தமாக பெறும் பல்வேறு இலாகா சம்மந்தப்பட்ட அனுமதிகளையும் உரிமஙகளையும் தொழில்வரி, வருமானவரி, வேவைவரி, விற்பனைவரி மற்றும் சரக்கு சேவை வரி (GST) போன்ற எல்லா வரிகளையும் அவர்கள் பெயரிலே நிலுவையின்றி செலுத்தி அதற்கான சான்றாவணஙகளை தஙகள் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

**70.** உரிமதாரர் தன் சொந்த பொறுப்பிலும் செலவிலும் அட்டவணையில் கண்ட தொகையை வசூல் செய்து கொள்ள வேண்டியது. வழக்குகள் ஏற்பட்டோ அதன் தீர்ப்பின் படியோ தொகைகளை வசூல் செய்ய இயலாமற் போனாலும் நகராட்சி எவ்வித நட்டத்திற்கும் பொறுப்பு ஏற்காது. அட்டவணையில் கண்டபடி வசூல் செய்ய சட்டப்படி நடவடிக்கை எடுக்க உரிமதாரருக்கு முழு உரிமையுண்டு. அரசாஙக கணக்கு தணிக்கை செய்வோர் ஏதாகிலும் தொகையை உரிமதாரரிடம் வசூலிக்கும்படி ஆணையிட்டால் அந்த தொகையை செலுத்துவதற்கு உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

**71.** இந்த அறிக்கையில் கண்டுள்ள கட்டுப்பாடுகளின் அடிப்படையில் உரிமையாணை பெற்றவர் நடக்கத் தவறினால் உரிமையைத் தாமாகவை நிறத்திக் கொண்டதாகக் கருதப்படும். மேலும் இதன் விளைவாக ஏற்படும் எல்லா பொருட்கேட்பையும் அவர் கட்டியிருக்கும் பொறுப்புத் தொகையிலிருந்தோ மற்றெந்த வகையிலோ முழுவதையுமோ பகுதியையுமோ ஈடு செய்து கொள்ள நகர்மன்றத்திற்கு அதிகாரமுண்டு. ஒப்பந்தக் கட்டுப்பாடுகளின் செயல்படாத குற்றத்திற்கு பொறுப்புத்தொகையை பறிமுதல் செய்ய நகர்மன்றத் தீர்மானமே முடிவாகும்.

**72.** உரிமம் அல்லது உரிமையாணையை ரத்து செய்து மறு ஏலம் கோருவதற்கு நகராட்சி ஆட்களைக் கொண்டு நடத்துவதற்கும் நகர்மன்றம் உரிமையுடையதாகும். அவ்வண்ணம் ரத்து செய்து மறு ஏலம் போடுவதாலும் நகராட்சி ஆட்களைக் கொண்டு நடத்துவதாலும் ஏற்படும்

செலவுகளுக்கும், நட்டங்களுக்கும் உரிமதாரரே பொறுப்பாளியாவதுடன் அவருடைய பொறுப்புத்தொகையை எந்தக் காலத்திலும் பறிமுதல் செய்து கொள்வதற்கும் இணங்கியவராவார். அப்படி மறு ஏலத்திலோ நகராட்சியால் நடத்துவதாலோ ஆதாயம் ஏற்படின் அதில் பங்கு பெற உரிமதாரருக்கு அல்லது உரிமையாணை பெற்றவருக்கோ உரிமையில்லை.

73. உரிமதாரருக்கு அல்லது உரிமையாணை பெற்றவருக்கு விதிக்கும் அபராதங்கள் அல்லது அவரிடமிருந்து வரவேண்டிய பாக்கிகள் முதலியவற்றை உரிமதாரரால் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். தவறினால் அறிவிப்பின்றி அவர் செலுத்தியிருக்கும் பொறுப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளப்படும். அப்படி ஈடு செய்து கொண்ட விபரத்தை தெரிவித்த தேதியிலிருந்து ஒரு வார கெடுவிற்குள் ஈடு செய்த தொகையை கட்ட வேண்டும். தவறினால் மேற்படி ஈடு செய்த தொகையை உரிமம் தொகையில் நிலுவை நின்றதாக கருதி உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

74. உரிமம் அல்லது உரிமையாணையை பெற்றவர்கள் குறிப்பிட்ட இடம் தவிர மற்ற எந்த இடத்திலும் குறிப்பாக உரிம இடங்களின் முன்னாலும் வெளிப்பக்கங்களிலும் நடைபாதை வழிகளில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்து இடையூறு ஏற்படுத்தக்கூடாது. கடைகளுக்கு முன்னாலோ, பின்னாலோ, பக்கவாட்டிலோ எந்த விதமான தன் அமைப்புகள் அமைத்தோ வேறு வழியிலோ சாமான்கள் தொங்கவிடவோ, சாமான்கள் விற்பனைக்கு வைக்கவோ, விளம்பரப்படுத்தவோ கூடாது. அவ்விதம் மீறி நடந்தால் முன்னறிவிப்பின்றி அவைகளை துறை மூலம் அப்புறப்படுத்தி அவைகளை ஏலம் விட ஆணையர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

75. பொது நிபந்தனைகளில் குறிப்பிட்டபடி அபராதம் விதிக்கப்படும். அவ்வகையில் உரிமதாரருக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை நகர்மன்றத்திடம் கேட்க உரிமை கிடையாது. நிரந்தர அமைப்புகள் அமைத்தல் போன்ற எந்தவிதமான ஆக்கிரமிப்புகளும் உரிமம் அல்லது உரிமைகளை பெற்ற இடத்தை சுற்றி செய்யக் கூடாது. இந்த நிபந்தனைகள் எந்த விதத்திலாவது மீறியவர்களின் உரிமம் அல்லது உரிமையாணை ரத்து செய்யப்படும்.

76. உரிமதாரரிடம் ஒப்புவிக்கப்பட்ட சொத்துக்களின் ஏதாவது சேதங்கள் ஏற்பட்டிருந்தால் நகர்மன்றம் செய்யப்படுகிற தீர்மானப்படியுள்ள நஷ்டஈட்டை (Compensation) உரிமதாரர்கள் செலுத்திவிட வேண்டும். இது தொடர்பாக நகர்மன்றம் தீர்மானமே முடிவானது. மேலும் உரிமதாரர்கள் உரிமம் காலக்கெடு முடிவடைந்தவுடன் மேற்படி இடத்தை காலி செய்து மேற்படி சொத்துக்களையும் அதில் உள்ள பொருட்களையும் நகராட்சியிடம் நல்ல நிலையில் ஒப்படைக்க வேண்டும். தவறினால் உரிமதாரர் சொத்தை உரிமை கொள்வதோடு அதனால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நட்டங்களுக்கும் உரிமதாரரே பொறுப்பாவார். எக்காரணத்தைக் கொண்டும் உரிமதாரர் ஒப்புக்கொண்ட உரிமையை திரும்ப ஒப்படைக்க விரும்பினால் (Surrender) உரிமை கிடையாது. அப்படித் திரும்ப ஒப்படைக்க விரும்பினால் நகராட்சி எந்தவித நஷ்டஈடும் வழங்காது.மேலும் அதனால் ஏற்படும் இழப்புகளுக்கும் உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

77. சரக்கு மற்றும் சேவை வரி, வருமானவரி, ஆடம்பர வரி, தொழில்வரி மற்றும் அரசுக்கு செலுத்தப்படவேண்டிய இதர வரிகளை உரிமதாரரே செலுத்த கடமைப்பட்டவராவார்.

78. நகராட்சியின் எழுத்து மூலமான உத்தரவை முன்னதாக பெறாமல் உரிமம் பெற்றவர் உரிமையாணையை இன்னொருவருக்கு மாற்றவாவது அல்லது உரிமத்திற்கு கொடுத்தால்

ஏலதாரர் கட்டியிருக்கும் வைப்புத் தொகையை நகர்மன்றத்திற்கு ஆதாயமாக்கிக் கொள்வதுடன் உரிமையாணையை ரத்து செய்து அந்த இடம் இந்த உரிமம் பெற்றவர் சொந்த பொறுப்பில் மறு ஏலம் விடப்படும். இதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கு இவரே பூரண பொறுப்பாளியாவதுடன் இந்த நஷ்டங்களை ஈடு செய்யவும் கட்டுப்பட்டவராவார்.

**79.** ஏல அறிவிப்பில் அல்லது ஒப்பந்த பத்திரத்தில் இருக்கும் வார்த்தைகளுக்கு அல்லது கட்டுப்பாடுகளுக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களால் கொடுக்கப்படும் விளக்கமே முடிவானதாகும். இந்த அறிக்கையில் கண்ட கட்டுப்பாடுகளுடன் வேறு எந்த கட்டுப்பாடுகளை சேர்க்கவோ மாற்றவோ ஆணையாளருக்கு உரிமையுண்டு.

**80.** ஆணையாளர் மற்றும் அவரது அலுவலர்களுக்கும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது கொடுக்கும் உத்தரவுகளின்படி நடந்து வர உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

**81.** உரிமையாணை ஆணையர் அல்லது மேற்படியாரின் அலுவலர்கள் ஆகியோரின் மேற்பார்வைக்கும் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டதாகும்.

**82.** இந்த விளம்பரத்தில் கண்டுள்ள யாதொரு நிபந்தனைகள் சட்டதிட்டங்கள் விதிக்க அரசு ஆணைகள் இதர ஆணைகள் மற்றும் இவை அனைத்தும் சம்மந்தமாகவும் ஆணையர் கொடுக்கும் விளக்கமே முடிவானது.

**83.** உரிமம் அல்லது உரிமையாணை ஏற்படும் சிக்கல்கள், பொது சிறப்புக் கட்டுப்பாடுகள் குறித்தும் உரிம ஒப்பந்த பத்திரத்தில் எந்த சொல் அல்லது வாக்கியத்தில் பொருள் பற்றியும் ஆணையர் அவர்களின் தீர்ப்பும் விளக்கமும் முடிவானது. உரிமதாரர் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியவராவார்.

**84.** உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கும் அவருடைய அதிகாரம் பெற்ற பணியாளர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டு நடக்க வேண்டும். உரிமம் அல்லது உரிமை இடங்களில் ஆணையரோ அல்லது உரிமை பெற்றவரின் முன் அனுமதி பெறாமல் எந்த நேரத்திலும் எத்தனை தடவைகளும் உரிமையிடத்தில் நுழையவோ, நுழைந்து பரிசோதனைகள் செய்யவோ மின் இணைப்புகளை துண்டிக்கவோ உரிமை உண்டு. ஆணையர் அவர்களால் அவ்வப்போது அனுப்பப்படும் ஆணைக்கு உரிமதாரர் அல்லது உரிமையாணை பெற்றவர் கட்டுப்பட்டவராவார்.

**85.** எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த அறிக்கையில் கண்ட கட்டுப்பாடுகளுடன் வேறு எந்த கட்டுப்பாட்டைச் சேர்க்கவும் அல்லது மேற்படி கட்டுப்பாடுகளில் மாற்றம் செய்ய நகர்மன்றத்திற்கு எல்லா உரிமை உண்டு. அவ்வித மாற்றத்திற்கு உரிமதாரர் கட்டுப்பட்டவராவார்.

**86.** உரிமையாணைதாரர் என்று வரும் இடங்களில் லைசென்ஸ்தாரர் என்ற முறையே சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**87.** ஏலம் வரும் இடங்களில் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி என்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**88.** ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புத் தொகை மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்றிதழை ஆணையர் பத்மனாபபுரம் நகராட்சி என்ற பெயரில் முன்னதாகவே செலுத்தியிருந்தாலொழிய ஏலம் கோர யாருக்கும் அனுமதி கோரப்பட மாட்டாது. நகராட்சியில் வேலை செய்வதற்காகவோ, சாமான்கள் வாஙகுவதற்காகவோ மற்றும் இதர காரியஙகளுக்காகவோ செலுத்திய வைப்புத் தொகையினை இந்த ஏலத்திற்கான வைப்புத் தொகைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**89.** உரிமதாரருக்கு இந்நகராட்சியின் உரிமத்திற்காக ஒப்படைக்கப்படும் கட்டிடஙகள் அல்லது சொத்துகளின் பேரில் எவ்வித பாத்தியமோ அல்லது தமிழ்நாடு வாடகை கட்டுப்பாடு சட்டம் மற்றும் விதிகளின்படி வாடகை பாத்தியமோ தமிழ்நாடு குத்தகை பாதுகாப்பு சட்டம் மற்றும் விதகளின்படி குத்தகைதாரர் பாத்தியமோ கிடையாது.

**90.** இந்த அறிக்கையில் கண்டிருக்கும் எல்லா உரிமை ஆணைகளுக்கும் ஒப்பந்தஙகளுக்கும் ஏல காலத்தில் கட்டப்படும் பொறுப்புத்தொகையை அந்தந்த உரிமையாணை பெற்றவருக்கும் கணக்குகள் முழுவதும் தணிக்கையான பிறகு தான் திருப்பித் தரப்படும். தணிக்கையில் ஏதாவது தொகை பிடிக்க நேர்ந்தால் அதை பிடித்தம் செய்து கொண்டு மீதி தான் திருப்பி கொடுக்கப்படும்.

**91.** கடைகளுக்கு மாத வாடகை பிரதி மாதம் 5– ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். மேற்படி குறிப்பிட்ட நாளில் தொகை செலுத்த தவறினால் தவறிய நாள் முதற்கொண்டு செலுத்தப்டும் தேதி வரை 18% வீதம் அபராதம் வட்டி சேர்த்து உரிமை தொகையுடன் செலுத்த வேண்டும் (அரசாணை நிலை எண். 26 (ந.நி.ம.கு.வ.து.) நாள் 28/01/1994 வட்டி வீதம் அவ்வப்போது அரசாணைப்படி கூட்டவோ குறைக்கவோ செய்யப்படும்).

**92.** சமணபகவான் மகாவீரர் சுவாமி அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் நிமித்தம் ஆட்டடி சாலைகள், கசாப்பு கடைகள், மீன் கடைகள் ஆகியவற்றை ஏப்ரல் மாதம் 3– ம் தேதியும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 2– ம் தேதியும் திருவள்ளுவர் தினத்தன்று வடலூர் ராமலிஙகம் நினைவு நாளன்று மற்றும் அரசு உத்தரவிடும் நாட்களில் மூடிவிட வேண்டும். இதற்கு எந்தவித நஷ்டஈடும் கோரக்கூடாது.

**93.** ஏலம் உறுதி செய்யப்பட்டு உத்தரவு பெற்ற 7 தினஙகளுக்குள் ரூ. 100/– மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் உரிமதாரர் நகராட்சியின் சட்ட திட்டஙகளுக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன் எனவும் நகராட்சிக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலும் வழக்கு தொடருவதில்லை எனவும் நோட்டறி வழக்கறிஞர் ஒப்பம் பெற்ற அசல் பத்திரத்தில் ஒப்பந்தம் எழுதி கொடுக்க வேண்டும்.

**94.** நகராட்சியால் புதிய கட்டுமான பராமரிப்பு பணிகள் உரிமம் காலத்தில் மேற்கொள்ளப்பட்டால் உரிமம் அனுபவிக்கும் காலத்திற்குரிய (மாதஙகள்) உரிம தொகை கணக்கிட்டு வசூலிக்கப்படும்.

**95.** உரிமம் ஆண்டு என்பது 2020 – 2021 முதல் 2022 – 2023 முடிய (01–04–2020 முதல் 31–03–2023 வரை) மூன்று ஆண்டு காலமாகும்.

மேற்படி குத்தகை இனங்களுக்கு 01/04/2020 முதல் 31/03/2023 முடிய மூன்றாண்டு கொண்ட தொகுப்பு கால அளவுக்கு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையினை அரசிதழில்(Gazet)- ல் மற்றும் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவீனங்கள் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>.**

1) 2020-2021 முதல் 2022-2023 முடிய மூன்றாண்டு அனுபவ உரிமைக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

2) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அரசிதழ் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யலாம். அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 1564/19/அ1).

**<u>மன்றத் தீர்மானம் எண்.1558,நாள்.31.10.2019.</u>**

அனுமதி வழஙகப்படுகிறது.

ஒப்பம்./—
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்(பொ),
பத்மனாபபுரம் நகராட்சி.